**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 61/2025**

**Prosecution witness : அ.சா.9** **Date : 10.02.2026.**

| | |
|---|---|
| **Name : சத்யராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**குு.வி.மு.ச 311 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி சேர்க்கப்பட்டு முதல் விசாரணை**

1) நான் தற்போது கோனூரில் குடியிருந்து ஸ்டூடியோ வைத்து வேலை செய்கிறேன். இந்த வழக்கில் பிரபு என்பவர் என்னிடம் 01.11.2025 ம் தேதியன்று என் ஸ்டூடியோவுக்கு வந்து அவருடைய சேம்சங் கேலக்ஸி செல்போன் கொடுத்து அந்த செல்போனில் உள்ள வீடியோ பதிவுகளை பென்டிரைவ் வாயிலாக பதிவிறக்கம் செய்து தருமாறு கூறினார். அந்த பதிவுகள் அனைத்தையும் நான் பென்டிரைவில் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். அப்போது நான் பதிவிறக்கம் செய்யும் விவரம் தெரிந்த காரணத்தால் அவ்வாறு செய்து கொடுத்தேன். பதிவிறக்கம் செய்தது குறித்து 63 சான்றிதழ் வழங்கியும் பிரபுவிடம் பென்டிரைவ் வழங்கினேன். 63 சான்றிதழ் **அ.சா.ஆ.13** ஆகும். பென்டிரைவ் **சா.பொ. 1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

2) இந்த பென்டிரைவ் தற்போது வரை யார் வசம் இருந்தது என்றால் போலீசார் வசம் இருந்தது. இந்த பென்டிரைவ் தான் நான் கொடுத்தது என்று எதை வைத்து சொல்கிறேன் என்றால் அதன் லேபிளை வைத்து சொல்கிறேன். இதே போன்று பென்டிரைவ் லட்ச கணக்கில் உள்ளது என்றால் ஆமாம். போலீசார்

கேட்டுக் கொண்டதால் தான் நான் பதிவிறக்கம் செய்தேன் என்றால் பிரபு சொன்னதால் செய்தேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**